**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

அசல் வழக்கு எண். 377/2016

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜோயல் ரிச்சர்டு | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : லீனஸ் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 50 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 23-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 12, 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் 10ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என்னுடைய ஆதார் அட்டையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் கடந்த 10 வருடங்களாக வசித்து வருகிறேன். வாதி சங்கம் தமிழ்நாடு சங்க பதிவுகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்க விதிமுறைகள் எனக்கு தெரியும். சங்கம் என்ன நோக்கத்திற்காக துவங்கப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) தமிழ்நாடு சங்க பதிவுகள் சட்டத்தின்படி சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தொடர்பாகத் தான் வழக்காட முடியும் என்றால் சரிதான். தாவாச் சொத்து சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து சங்கத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை. சங்கத்திற்கு உரிய மெமோராண்டம், துணை விதிகள் ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மெமோராண்டத்தை பார்த்தால் தான், சங்கத்தின் உறுப்பினர்கள் யார், அவர்கள் முகவரி மற்றும் என்ன தொழில் செய்கிறார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

3) மெமோராண்டத்தை பார்த்தால் தான், சங்கத்தின் நோக்கம் என்ன என்பது தெரிய வரும் என்றால் சரிதான். சங்கத்தின் நோக்கம் சட்டப்படியானதாக இருக்கவேண்டும்

என்றால் சரிதான். சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் சட்டத்திற்கு முரணான ஆக்கிரமிப்பாளர்கள் என்றால் தாவாச் சொத்தில் அனுமதியுடன் குடியிருப்பதாக சாட்சி பதில் அளிக்கிறார்.

4) வா.சா.ஆ.21 ஆவணம் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி வரையிலான மினிட் புத்தகம் ஆகும். முதல் கூட்டம் தொடர்பான தேதி எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 3 வது கூட்டத்திற்கும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கூட்டம் அணைமேட்டில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. மினிட் புத்தகங்களுக்கு முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) 3 வது கூட்டத்திற்கும், வழக்கு தாக்கல் செய்வதற்காக அங்கீகாரத்திற்கான பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது தொடர்பான குறிப்பிற்கும் இடையில் சுமார் 26 வெற்றுத் தாள்கள் விடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அவ்வாறு விடப்பட்டதற்கான குறிப்பான காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். குறிப்பிட்ட காலத்தில் எந்த கூட்டமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். சங்க விதிகளின் ஆண்டுதோறும் சங்கம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான்.அதற்கு ஒவ்வொரு ஆண்டும் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறான தீர்மான விவரங்கள் எதுவும் வா.சா.ஆ.21 ல் இல்லை என்றால் சரிதான்.

6) இன்றைய தேதி வரை சங்கம் முறையாக புதுப்பிக்கப்பட்டு, இயங்கி வருகிறது என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 ஆவணத்தில் வருடாந்திர நிதிகணக்குகள், புதிதாக சேர்ந்த உறுப்பினர்களின் விவரங்கள், இறந்த உறுப்பினர்களின் விவரங்கள் குறிப்பிடப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறான விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆரம்ப காலத்தில் இருந்து உறுப்பினர்கள் சேர்ப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி சேர்க்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறான விவரம் எதுவும் வா.சா.ஆ.21 ல் இல்லை என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ.21ல் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் யார் தலைவர், அலுவலக பிரதிநிதிகள் யார் என்ற விவரம் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதி சங்கம் முறையாக செயல்படாததால் தான், அவ்வாறான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி சங்கத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் தாவாச் சொத்தை பொறுத்து உரிமை ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான்.

8) தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3.30 ஏக்கர் ஆகும். வழக்குரை பத்தி 4ல் சொல்லப்பட்ட 1.30+1.99 ஏக்கர் முழுவதும் ஆக்கிரமிப்பில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 12 மற்றும் 13 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் பார்க்கவில்லை. எதிர்வாதம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. சங்க உறுப்பினர்களில் சிலர் சொத்தின் மீது விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சங்க உறுப்பினர்கள் இல்லை. அப்பகுதியில் குடியிருப்பவர்கள் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

9) தாவாச் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள 3.30 ஏக்கர் நிலத்தில் குடியிருப்போர் தான் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். சங்க உறுப்பினர்கள் 3.30 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்றால் அப்பகுதியில் குடியிருக்கும் அனைத்து மக்களுக்காகத் தான் தாவா தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ.21ல் குறிப்பிட்ட அயூப்கான் எங்கள் சங்கத்தின் உறுப்பினர் என்றால் சரிதான். அயூப்கான் சங்கத்தின் பொறுப்பில் இருந்து வெளியே வந்துவிட்டார்.

10) தற்போது வரை சங்கத்தின் உறுப்பினர்கள் யார் அது தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட தீர்மானம் என்ன என்பது தொடர்பான விவரங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அயூப்கான் சங்கத்தில் இருந்து வெளியேறியது தொடர்பான

ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அயூப்கான் தனியாக தாவா தாக்கல் செய்து இருக்கிறார் என்றால் தற்போது தான் தெரியும். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் என்னை சேர்த்து 99 நபர்கள் உறுப்பினர்கள் ஆவோம்.

11) தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள சங்க உறுப்பினர்களின் பட்டியலில் என் பெயரோ, அயூப்கான் பெயரோ அல்லது சரஸ்வதியின் பெயரோ இல்லை என்றால் சரிதான். என் வசதிக்கேற்ப தயார் செய்யப்பட்டதால் தான் முழுமையான விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அமைந்திருக்கும் பகுதியில் அணைமேடு குடியிருப்போர் நலச்சங்கம் என்ற ஒரு அமைப்பு இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன அமைப்பும் இவ்வழக்கை போல் அ.வ.எண்.427/2016 வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

12) தாவாச் சொத்தின் டவுன் சர்வே எண் 18 என்றால் இல்லை. தாவா தாக்கல் செய்யப்பட்டபோது தாவா சொத்தின் டி.எஸ்.எண்.135 ஆகும். உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. டி.எஸ்.எண்.135 என வழக்கின் சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தின் தற்போதைய டி.எஸ்.எண்.18 என்றாலும், அது தற்போது வரை 1 முதல் 8 பிரதிவாதிகளின் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல.

13) 4ம் பிரதிவாதி முத்துச்சாமி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.6569/2017 தாக்கல் செய்து அதில் கடந்த 04.11.2019ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, தாவா சொத்தினை சர்வே செய்து, அதனை வட்டாட்சியர் மூலம் வேலி அமைத்து கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. W.P.No.6569/2017 மனுவில் இவ்வழக்கு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆர்.டி.ஓ. விசாரணைக்கு வந்தபோது தான் எனக்கு தெரிய வந்தது.

14) கடந்த 2021ம் வருடம் ஆர்.டி.ஓ. விசாரணை நடைபெற்றது. W.P.No.6569/2017 உத்தரவினை பற்றி எனக்கு கடந்த 2021ம் வருடம் தெரிய வந்தது முதல் தற்போது வரை அம்மனுவின் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். (கற்றறிந்த 12 மற்றும் 13 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் தொடர் குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.23 15:23:28 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.